## க:ஃப்:ஃபாரா நோன்பு

ஒரு தவறு அல்லது அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்ததன் காரணமாக, அதற்குப் பரிகாரமாக நோற்கப்படும் நோன்பு கஃப்ஃபாரா நோன்பு எனப்படும், உதாரணமாக, தவறுதலாக ஒருவரைக் கொலை செய்துவிட்டவர் அதற்குப் பரிகாரமாக ஒரு அடிமையை விடுதலை செய்யும் ஆற்றலற்றவராக இருந்தால் அவர் இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்கவேண்டும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

فَمَن لَّمْ يَجِدْ فَصِيَامُ شَهْرَيْنِ مُتَتَابِعَيْنِ تَوْبَةً مِّنَ ٱللَّهِ ۗ وَكَانَ ٱللَّهُ عَلِيمًا حَكِيمًا ﴿٩٢﴾ (النسا 92)

*பொருள்: ஆனால், (பரிகாரத்திற்காக) அடிமை கிடைக்கப்பெறாதவன் பாவமன்னிப்புக்காக தொடர்ந்து இரண்டு மாதங்கள் நேன்பு நோற்கவேண்டும், இது அல்லாஹ்வினால் நிர்ணயிக்கப்பட்ட முறைகளாகும். மேலும், அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் நுண்ணறிவுடையவனாகவும் இருக்கின்றான் (அந் நிசா:92).*

இது ஒரு பாவச்செயல் புரிந்ததன் காரணமாக பாவமன்னிப்புக்கோரும் முறையாகும். உதாரணமாக, ஸ்ஜிஹார் (ஸ்ஜிஹார் என்பது ஒரு கணவன் தன்னுடைய மனைவியிடம் أَنْتِ عَلَيَّ كَظَهْرِ أُمِّي நீ எனக்கு என் தாயின் முதுகைப் போன்றவள் என்று கூறுவதாகும். அறியாமை காலத்தில், இது தலாஃக் கொடுப்பதற்கான ஒரு முறையாக இருந்து வந்தது) காரணமான நோன்பு என்பது இஸ்லாம் இந்த வழக்கத்தினை ஹராமானதாகப் பிரகடனப் படுத்தியதோடு அவ்வாறு கூறுபவர்கள் அதற்கான கஃப்ஃபாரா செய்ய வேண்டும் எனக் கடமையாக விதித்த பரிகாரமாகும். இதன் கஃப்ஃபாராவானது, ஒரு அடிமையை விடுதலை செய்யவேண்டும் அல்லது இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்கவேண்டும், அல்லது அறுபது ஏழைகளுக்கு உணவளிக்கவேண்டும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَٱلَّذِينَ يُظَٰهِرُونَ مِن نِّسَآئِهِمْ ثُمَّ يَعُودُونَ لِمَا قَالُوا۟ فَتَحْرِيرُ رَقَبَةٍ مِّن قَبْلِ أَن يَتَمَآسَّا ۚ ذَٰلِكُمْ تُوعَظُونَ بِهِۦ ۚ وَٱللَّهُ
بِمَا تَعْمَلُونَ خَبِيرٌ ﴿٣﴾ فَمَن لَّمْ يَجِدْ فَصِيَامُ شَهْرَيْنِ مُتَتَابِعَيْنِ مِن قَبْلِ أَن يَتَمَآسَّا ۖ فَمَن لَّمْ يَسْتَطِعْ فَإِطْعَامُ
سِتِّينَ مِسْكِينًا ۚ ﴿٤﴾ (المجادلة 4)

*பொருள்: எவர்கள் தங்களுடைய மனைவியரை ஸ்ஜிஹார் செய்து, பின்னர் தாங்கள் கூறிய சொல்லைவிட்டுத் திரும்பிவிடுகின்றார்களோ, அவர்கள்*

www.tuzarfalahi.com

*இருவரும் ஒருவரையொருவர் தீண்டும் முன்பாக ஓர் அடிமையை விடுதலை செய்யவேண்டும், இவ்வாறு உங்களுக்கு அறிவுரை கூறப்படுகின்றது. மேலும், நீங்கள் எவற்றைச் செய்கின்றிர்களோ அவற்றை அல்லாஹ் மிகவும் அறிந்தவனாக இருக்கின்றான். இனி, எவருக்கேனும் அடிமை கிடைக்கவில்லையென்றால், அவ்விருவரும் ஒருவரையொருவர் தீண்டுதவற்கு முன்பாக இரண்டு மாதம் தொடர்ந்து நோன்பு நோற்கவேண்டும். ஒருவர் இதற்கு சக்தி பெறாவிட்டால் அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும் (அல் மஜாதலஹ்:3,4).*

கஃப்ஃபாராவின் நோன்புகளில், மேலும் ஒரு வகை கஃப்ஃபாரா நோன்பு உள்ளது, ஒருவர் சத்தியம் செய்துவிட்டார், ஆனால், அதனை நிறைவேற்றத்தவறி விட்டால், அதற்கான கஃப்ஃபாராவாக மூன்று நாட்கள் நோன்பு நோற்க வேண்டும். இது, அவ்வாறு செய்த ஒருவர், பத்து ஏழைகளுக்கு உணவளிக்கவோ அல்லது அவர்களுக்கு ஆடைகள் அணிவிக்கவோ அல்லது ஒரு அடிமையை விடுதலை செய்யவோ ஆற்றலற்றவராக இருக்கும் நிலையில் மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

لَا يُؤَاخِذُكُمُ اللَّهُ بِاللَّغْوِ فِي أَيْمَانِكُمْ وَلَٰكِن يُؤَاخِذُكُم بِمَا عَقَّدتُّمُ الْأَيْمَانَ ۖ فَكَفَّارَتُهُ إِطْعَامُ عَشَرَةِ
مَسَاكِينَ مِنْ أَوْسَطِ مَا تُطْعِمُونَ أَهْلِيكُمْ أَوْ كِسْوَتُهُمْ أَوْ تَحْرِيرُ رَقَبَةٍ ۖ فَمَن لَّمْ يَجِدْ فَصِيَامُ ثَلَاثَةِ أَيَّامٍ ۚ
ذَٰلِكَ كَفَّارَةُ أَيْمَانِكُمْ إِذَا حَلَفْتُمْ ۚ وَاحْفَظُوا أَيْمَانَكُمْ ۚ كَذَٰلِكَ يُبَيِّنُ اللَّهُ لَكُمْ آيَاتِهِ لَعَلَّكُمْ تَشْكُرُونَ

(المائد 89) ﴿٨٩﴾

பொருள்: *நீங்கள் செய்த வீணான சத்தியங்களுக்காக அல்லாஹ் உங்களைக் குற்றம் பிடிப்பதில்லை. ஆயினும், நீங்கள் உறுதிப்படுத்திச் செய்த சத்தியங்களுக்காக (அவற்றை நீங்கள் முறித்துவிட்டால்) உங்களை அவன் நிச்சயம் தண்டிப்பான். முறித்துவிட்ட சத்தியத்திற்கான குற்றப்பரிகாரம் (இதுதான்), நீங்கள் உங்கள் குடும்பத்தாருக்கு அளிக்கின்ற உணவுகளில் நடுத்தரமானவகையிலிருந்து பத்து வறியவர்களுக்கு உணவளிக்கவேண்டும், அல்லது அவர்களுக்கு ஆடை வழங்க வேண்டும் அல்லது ஓர் அடிமையை விடுதலை செய்யவேண்டும். ஆனால், இவற்றில் எதற்கும் சக்தி பெறாதவர்கள் மூன்று நாட்களுக்கு நோன்பு நோற்கவேண்டும், இதுதான் அதற்குரிய குற்றப்பரிகாரமாகும். எனவே, உங்கள் சத்தியங்களை முறித்துவிடாமல் பேணுங்கள். தன்னுடைய சட்டதிட்டங்களை நீங்கள் நன்றி செலுத்துபவர்களாகத் திகழக்கூடும் என்பதற்காக இவ்வாறு அல்லாஹ் உங்களுக்குத் தெளிவாக்குகிறான் (அல் மாயிதா:89).*

www.uzarfalahi.com

* * *